★ நிறுவனங்களுக்கு சிறப்பு வாகன எண் பட்டை விற்பதற்கு அங்கீகாரம் இல்லை

★ நிதி ஒதுக்கீடு விஷயத்தில் எதிர்க்கட்சிகளை மட்டும் குறைகூறுவது ஏன்?

★ நீதிபதிகள் நியமன நடைமுறை தொடர்பில் ஒப்பீட்டு ஆய்வு

★ 6 நாடாளுமன்ற உறுப்பினர்களின் தற்போதைய நிலை என்ன?

★ எல்லை கடந்த சிறப்புக் குழுவை அமைக்கும்படி எதிர்க்கட்சிகள் தரப்பில் பரிந்துரை



# டிபிகேஎல் வீடுகளுக்கு 69 மில்லியன் ரிங்கிட் வாடகை பாக்கி





## மக்களவையில் அமைச்சர் தகவல்

கோலாலம்பூர், ஆக. 7-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் வீடுகளுக்கான வாடகை பாக்கியாக தற்போது ஏறத்தாழ 69 மில்லியன் ரிங்கிட்டைப் பதிவு செய்திருக்கிறது என்று மக்களவையில் தெரிவிக்கப்பட்டது. இதற்கு முன் இந்தத் தொகை 70 மில்லியன் ரிங்கிட்டிற்கும் அதிகமாக இருந்தது. தற்போது இந்த வாடகை பாக்கி 1.09 மில்லியன் ரிங்கிட் அளவில் குறைந்திருக்கிறது என்று பிரதமர்துறை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நாடாளுமன்றத்தில் கூறினார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளில் வசிப்போர் வாடகையை முறையாகச் செலுத்துவதை உறுதிசெய்ய மாநகர் மன்றம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வீடுகளுக்கான வாடகையைச் பிஏ/பிபிஆர் வாடகையைச் செலுத்துவோம் எனும் இயக்கமும் மேற்கொள்ளப்பட்டு வாடகை பாக்கி வசூலிக்கப்படுகிறது என்று அவர் சொன்னார்.

மக்களவையில் புக்கிட் பிந்தாங் பக்காத்தான் ஹராப்பான் நாடாளுமன்ற உறுப்பினர் போங் ஹுய் லுன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

70 மில்லியன் ரிங்கிட் வரை வாடகை பாக்கி வைத்திருக்கும் டிபிகேஎல் வீடுகளில் குடியிருப்போரிடம் இருந்து வாடகையை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று போங் கேள்வி எழுப்பி இருந்தார்.



### 6 எம்பிகள் விவகாரம்

எதிர்க்கட்சி அணியில் இருந்து விலகுவதற்காக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமிற்கு ஆதரவு அளித்திருக்கும் பெர்சத்து கட்சியின் ஆறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து எழுத்துப்பூர்வமாகத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்று நாடாளுமன்ற சபாநாயகர் டான்ஸ்ரீ ஜொஹாரி அப்துல் மக்களவையில் கூறினார்.

இந்த ஆறு பேரிடம் இருந்தும் கறுப்பு - வெள்ளையாக எந்தத் தகவலையும் நான் பெறவில்லை என்று அவர் உறுதி செய்தார்.

நாடாளுமன்றத்தில் உலுத்திரெங்கானு தொகுதி பெரிக்காத்தான் நேஷனல் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ரோஸோல் வஹிட் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். பெர்சத்து கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலை என்ன என்று ரோஸோல் கேள்வி எழுப்பி இருந்தார்.

மக்களவையில் கேள்வி - பதில் நேரம் முடிந்த பிறகு அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார். புக்கிட் கந்தாங் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சைட் அபு ஹுசேன் ஹபிஸ் சைட் அப்துல் ஃபஸால், லாபுவான் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ டாக்டர் சுஹாய்லி அப்துல் ரஹ்மான், ஜெலி நாடாளுமன்ற உறுப்பினர் ஸஹாரி கெச்சிக், குவா மூசாங் நாடாளுமன்ற உறுப்பினர் முகமட் ஹஜ்ஜி அபு நைம், கோலக்கங்சார் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ இஸ்கண்டார் ஸுல்கர்னாய்ன் அப்துல் காலிட், தஞ்சோங் காராங் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ டாக்டர் ஸுல்கப்ரி ஹனாபி ஆகியோரே அந்த ஆறு எம்பிகள் ஆவர்.

இந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத் தரப்புப் பக்கம் இருக்கிறார்களா அல்லது மதில்மேல் அமர்ந்திருப்பதுபோல் எதிர்க்கட்சிப் பக்கம் இருக்கிறார்களா என்று ரோஸோல் கேள்வி எழுப்பினார்.



### அமைப்பு விதிகள்

கடந்த ஆண்டு தேசிய விவசாயிகள் அமைப்பின் அமைப்பு விதிகள் இடைநீக்கம் செய்யப்பட்டதை அடுத்து கூட்டக்குறிப்பு உள்ளிட்ட முழு விசாரணை அறிக்கையை அறிவிப்பதா வேண்டாமா என்பது பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என விவசாயம், உணவுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் சாபு மக்களவையில் கூறினார்.

இதுபற்றி சட்ட ஆலோசகரின் கருத்துகளைப் பெற்ற பிறகுதான் முடிவு எடுக்கப்படும் என்று அவர் சொன்னார். இப்போதைக்கு விசாரணை முடிவைப் பொதுமக்களுக்கு அறிவிக்க இயலாது. ஏனெனில் அதுபற்றி முதலில் சட்ட கருத்துகளைப் பெற வேண்டும் என்று அவர் கூறினார்.

விசாரணை அறிக்கை முடிவு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுமா இல்லையா என்பது சட்டக் கருத்துகளைப் பெற்ற பிறகுதான் தீர்மானிக்கப்படும் என்று அவர் சொன்னார். ஆனால் இப்போதைக்கு அதனை அறிவிக்க முடியாது. ஏனெனில் அது இன்னும் விசாரணைக் கட்டத்தில் உள்ளது என்று அவர் கூறினார்.

நேற்று மக்களவையில் கேள்வி - பதில் நேரத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

### நீதிபதிகள் நியமனம்

இங்கிலாந்து, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் நீதிபதிகள் நியமன நடைமுறைகளை ஆதாரங்கள் அடிப்படையில் ஒப்பீடு செய்யும் ஆய்வு பிரதமர்துறையால் நடத்தப்பட்டு வருகிறது என்று பிரதமர்துறை (சட்டம் மறுசீரமைப்பு) அமைச்சர் டத்தோஸ்ரீ அஸாலினா ஒஸ்மான் சைட் மக்களவையில் கூறினார்.

பிரதமர் துறையின் சட்ட விவகாரப்பிரிவு மூலம் அரசாங்கம் இந்த ஒப்பீட்டு ஆய்வை நடத்தி வருகிறது என்றார் அவர். நீதி பரிபாலனத்துறை, மலேசிய வழக்கறிஞர்கள் மன்றம், அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர் கல்விக் கழகம், கூட்டரசு அரசிய லமைப்புச் சட்ட நிபுணர்கள், சிவில் சமுதாய அமைப்புகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடன் கலந்துரையாடல் நடத்தி ஒரு முழுமையான ஆய்வு நடத்தப்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.



கூட்டரசு அரசியலமைப்புக் கோட்பாடுகளுக்கு ஏற்ப நீதிபதிகள் நியமனம் இன்னும் வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கு இந்த அணுகுமுறை கையாளப்படுகிறது என்றும் அவர் சொன்னார். மக்களவையில் லாபிஸ் தொகுதி பக்காத்தான் ஹராப்பான் நாடாளுமன்ற உறுப்பினர் பாங் ஹாக் லியோங் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

### சிறப்புக்குழு

கடந்த 12ஆவது மலேசியத் திட்டத்தில் அடையப்படாத இலக்குகள் பற்றி ஆய்வு செய்ய கட்சிகடந்த ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் பரிந்துரைப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ ஹம்ஸா ஸைனுடின் மக்களவையில் கேட்டுக் கொண்டார்.

இந்தக் குழுவில் அரசாங்கத் தரப்பு மக்கள் பிரதிநிதிகளும் எதிர்க்கட்சித் தரப்பு மக்கள் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும். 13ஆவது மலேசியத் திட்டத்தையும் அதற்கடுத்து கொண்டு வரப்படும் மலேசியத் திட்டத்தையும் சிறந்த முறையில் அமல்படுத்துவதற்கு தேவைப்படும் நடவடிக்கைகளை ஆராய இந்தக் குழு பங்காற்ற முடியும் என்று ஹம்ஸா கூறினார். பிரதமர் டத்தோஸ்ரீ அன்வாரும் அமைச்சரவையும் வாக்குறுதி அளிக்கப்பட்டவைகளை நிறைவேற்ற வேண்டும். வெளிப்படையான, பொறுப்புமிக்க கோட்பாடு அடிப்படையில் இதனைச் செய்ய வேண்டும். அடையப்படாத இலக்குகள் பற்றி உண்மையான காரணத்தை மக்களுக்கு விளக்க வேண்டும் என்று ஹம்ஸா கூறினார்.

### சிறப்பு வாகன எண்கள்

எந்த நிறுவனங்களும் தனிநபர்களும் அரசு சாரா அமைப்புகளும் நன்மை பெறக்கூடிய நோக்கத்தில் சிறப்பு வாகனப் பதிவு எண்கள் வெளியிடப்படுவதற்கும் விற்கப்படுவதற்கும் போக்குவரத்து அமைச்சு யாருக்கும் அங்கீகாரம் வழங்கவில்லை என்று போக்குவரத்து துணை அமைச்சர் டத்தோ ஹஸ்பி அபிபோலா தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அடிப்படையில் இதுபோன்ற அங்கீகாரம் இப்போதெல்லாம் வழங்கப்படுவதில்லை என்று அவர் விவரித்தார். அரசு சாரா அமைப்புகளுக்கோ வர்த்தக நிறுவனங்களுக்கோ சிறப்பு வாகன எண் பட்டையை விற்பதில்லை அல்லது வெளியிடுவதில்லை என்ற முடிவு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது.

2022ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் தேதி அமைச்சரவை செய்த இந்த முடிவைப் போக்குவரத்து அமைச்சு நிலைநிறுத்தி இருக்கிறது என்று அவர் மேலும் சொன்னார். மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இந்தப் பதிலை அளித்தார்.

குறிப்பிட்ட தரப்பினருக்கு லாபத்தைத் தரக்கூடிய வர்த்தக நோக்கத்திற்காக சிறப்பு வாகன எண்கள் வெளியிடப்படுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### குறை கூறாதீர்

மக்கள் பிரதிநிதிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கும் விவகாரத்தில் எதிர்க்கட்சியை அரசாங்கம் குறைகூறக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ ஹம்ஸா ஸைனுடின் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கருத்திணக்கம் இல்லாத காரணத்தினால் இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்று குறைகூற வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கருத்திணக்கம் பற்றி பிரதமரிடம் கேள்வி எழுப்பப்படுவதாக ஹம்ஸா கூறினார்.

இந்த விஷயத்தில் எதிர்க்கட்சியை மட்டும் குறைகூறக்கூடாது. அரசாங்கத்தின் தரப்பு எப்படி என்று அவர் கேட்டார். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்க அரசாங்கத் தரப்பில் கருத்திணக்கம் காணப்பட்டிருக்கிறதா என்று அவர் கேள்வி எழுப்பினார்.